**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர், தேதி: 01.03.2023
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**21 வது அகில இந்திய வேளாண் பல்கலைக்கழகங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள் 2022-23**

2022-23 ஆம் ஆண்டுக்கான அகில இந்திய வேளாண் பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான 21வது விளையாட்டுப் போட்டிகள் 20.02.2023 முதல் 24.02.2023 வரை ஹரியானாவின் ஹிசார், சிசிஎஸ் ஹரியானா வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

இதில் 65 பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த சுமார் 2800 க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் போட்டியில் பங்கேற்றனர்கள். இதில் 100 மீ, 200 மீ, 400 மீ, 800 மீ, 1500 மீ, 5000 மீ ஓட்டம், தடை ஓட்டம், ஈட்டி எறிதல், குண்டு எறிதல் உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன.

இதில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை, மாணவர்கள் பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு மூன்று தங்கப் பதக்கங்கள், பத்து வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் ஆறு வெண்கலப் பதக்கங்களை வென்று குவித்தனர். நான்கு அணிகளை வென்று, ஆடவர் கபடி அணி அரையிறுதிக்கு முன்னேறியது.

மேலும் 65 புள்ளிகளுடன் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை ஆடவர் மற்றும் பெண்கள் பிரிவில் ஒட்டு மொத்த தடகள சாம்பியன்ஷீப்பில் இரண்டாம் இடத்தை பிடித்தது. உடற்கல்வி உதவி இயக்குநர் ஜே.பி. தேசிகசீனிவாசன் மற்றும் உடற்கல்வி பயிற்றுனர் செல்வி. ம. நந்தினி ஆகியோர் மாணவர்களை வழிநடத்தி சென்றனர்.

மதிப்பிற்குரிய துணைவேந்தர், முனைவர் வெ.கீதாலட்சுமி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், முனைவர் நா.மரகதம், முதன்மையர் (மாணவர் நல மையம்) மற்றும் விளையாட்டு குழு தலைவர், முதன்மையர் (வேளாண்மை), முதன்மையர் (வேளாண் பொறியியல்) மற்றும் முதன்மையர் (முதுநிலை) ஆகியோர் பதக்கம் பெற்றவர்களை பாராட்டினார்கள்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**